# கணக்கீடு

## 8.2 இலாப நோக்கமற்ற அமைப்புக்களின் செயற்பாட்டுப் பெறுபேறுகளையும் நிதி நிலைமையையும் வெளிப்படுத்தல்.

Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

தேர்ச்சி மட்டம் 8.2

## இலாப நோக்கமற்ற அமைப்புக்களின் செயற்பாட்டுப் பெறுபேறுகளையும் நிதி நிலைமையையும் வெளிப்படுத்தல்.

**சந்தா**

குறிப்பிட்ட இலாப நோக்கமற்ற அமைப்பானது தமது குறிப்பிட்ட நிதியாண்டு காலப் பகுதிக்கான பிரதான வருமான ஊடகமாக அவ் அமைப்பிலுள்ள அங்கத்தவர்களிடமிருந்து திரட்டிக் கொள்ளப்படும் பெறுமதி சந்தா ஆகும்.

**சந்தாவின் வகைகள்**

1. சந்தா அல்லது சாதாரண சந்தா
2. ஆயுட்கால சந்தா

**சந்தா / சாதாரண சந்தா**

குறிப்பிட்ட அமைப்பு அக்கழத்தில் உள்ள அங்கத்தவர்களிடமிருந்து பிரதான வருமான ஊடகமாக நிதியாண்டிற்காக பெறப்படுவது சந்தா ஆகும்.

தொகுப்பு : திரு.சி.தவராஜா, ஆசிரியர்- கணக்கீடு (யாழ்/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார், ஆசிரியர்- த.தொ.தொ (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்.)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## சந்தா நிலுவை

குறிப்பிட்ட அமைப்பானது குறிப்பிட்ட நிதியாண்டிற்கான சந்தாவாக அக்கழகத்திலுள்ள அங்கத்தவர்களிடம் இருந்து இன்னமும் பெற வேண்டியுள்ள பெறுமதியினைக் குறித்து நிற்பது சந்தா நிலுவையாகும்.

இதில் ஆரம்ப சந்தா நிலுவை என்பது சென்றாண்டிற்குரிய சந்தாப்பணமானது இந் நிதியாண்டின் ஆரம்பத்தில் இன்னமும் பெறவேண்டியுள்ளது என்பது கருத்தாகும்.
இவ் ஆரம்ப சந்தா நிலுவையானது நிதி ஆண்டில் பெறப்பட்டுள்ள சந்தாப் பணத்தொகையில் இருந்து நிதியாண்டிற்குரிய சந்தாவினை கண்டறிந்து கொள்வதற்காக கழித்து காட்டப்படும்.

இறுதி சந்தா நிலுவை என்பதன் கருத்து குறிப்பிட்ட நிதியாண்டிற்குரிய சந்தாவானது குறிப்பிட்ட நிதியாண்டின் இறுதியில் இன்னமும் பெறவேண்டியுள்ளது என்பது கருத்தாகும்.
இவ் இறுதி சந்தா நிலுவையானது நிதி ஆண்டில் பெறப்பட்டுள்ள சந்தாப் பணத் தொகையுடன் கூட்டிக் காட்டப்படும்.

## சந்தா முற்பணம்

குறிப்பிட்ட அமைப்பானது எதிராண்டு காலப்பகுதிக்கான சந்தாப் பணத்தினை குறிப்பிட்ட நிதியாண்டு காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்படுவதனைக் குறித்து நிற்பது சந்தா முற்பணம் ஆகும்.

இதில் ஆரம்ப சந்தா முற்பணம் என்பதன் கருத்து குறிப்பிட்ட நிதியாண்டு காலப்பகுதிக்கான சந்தாப் பணமானது சென்ற ஆண்டு காலப்பகுதியில் பெறப்பட்டுள்ளது என்பது கருத்தாகும்.
இவ் ஆரம்ப சந்தா முற்பணமானது நிதியாண்டில் பெறப்பட்டுள்ள சந்தாப்பணத் தொகையுடன் கூட்டிக் காட்டப்படும்.

இறுதி சந்தா முற்பணம் என்பதன் கருத்து எதிர் ஆண்டு காலப்பகுதிக்கான சந்தாப் பணமானது குறிப்பிட்ட நிதியாண்டு காலப்பகுதியில் பெறப்பட்டுள்ளது என்பது கருத்தாகும். இவ் இறுதி சந்தா முற்பணமானது நிதியாண்டில் பெறப்பட்டுள்ள சந்தாப் பணத்தொகையில் இருந்து கழித்துக் காட்டப்படும்.

தொகுப்பு : திரு.சி.தவராஜா, ஆசிரியர்- கணக்கீடு (யாழ்/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார், ஆசிரியர்- த.தொ.தொ (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்.)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

விநாயகர் விளையாட்டுக் கழகத்தின் 31.12.2017இல் முடிவடைந்த வருடத்திற்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கு.

சந்தாப் பெறுவனவு 50000 ரூபா

*மேலதிகத் தகவல்கள்*

விளையாட்டுக் கழகத்தில் ஆரம்பத்தில் இறுதியில் காணப்பட்ட சந்தா நிலுவை சந்தா முற்பணங்களின் விபரங்கள் பின்வருமாறு

| | 31.12.2016 | 31.12.2017 |
|---|---|---|
| சந்தா நிலுவை | 6000 ரூபா | 7000 ரூபா |
| சந்தா முற்பணம் | 4000 ரூபா | 2000 ரூபா |

சந்தாக் கணிப்பு , சந்தாக் கணக்கின் ஊடாக பின்வருமாறு வருட சந்தாவைக் கணிப்பிட்டுக் கொள்ளலாம்.

நிதியாண்டிற்கான சந்தாக் கணிப்பு

| | |
|---|---|
| நிதியாண்டில் காசாகப் பெற்ற சந்தா | 5000 ரூபா |
| (-) ஆரம்ப சந்தா நிலுவை | (6000) ரூபா |
| | 44000 ரூபா |
| (+) ஆரம்ப சந்தா முற்பணம் | 4000 ரூபா |
| | 48000 ரூபா |
| (+) இறுதி சந்தா நிலுவை | 7000 ரூபா |
| | 55000 ரூபா |
| (-) இறுதி சந்தா முற்பணம் | (2000) ரூபா |
| வருட சந்தா | 53000 ரூபா |

**சந்தாக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| மீ.வ (ஆ.ச.நிலுவை) | 6000 | மீவ (ஆ.ச.முற்பணம்) | 4000 |
| வருமானச் செலவு க/கு மா/து | 53000 | காசு (கொள்ளல் கொடுத்தல் க.கு | 5000 |
| | | மீ.செ (இ.ச நிலுவை) | 7000 |
| மீ.செ (இ.ச. முற்பணம்) | 2000 | | |
| | 61000 | | 61000 |
| மீ.வ இ.நிலுவை | 7000 | மீ.வ இ.ச முற்பணம் | 2000 |

தொகுப்பு : திரு.சி.தவராஜா, ஆசிரியர்- கணக்கீடு (யாழ்/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார், ஆசிரியர்- த.தொ.தொ (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்.)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## நாட்குறிப்புப் பதிவுகள்

### ஆயுட்கால சந்தா

குறிப்பிட்ட அமைப்பானது குறிப்பிட்ட நிதியாண்டு காலப்பகுதியில் அங்கத்தவர் அவ் அமைப்பில் அங்கத்தவராக இருக்க விரும்பும் ஆயுட்காலம் வரைக்குமான சந்தாப்பணத்தினை நிதியாண்டு காலப்பகுதியில் மொத்தமாக பெற்றுக் கொள்ளப்படுவது ஆயுட்கால சந்தாவாகும்.

இங்கு பெறப்பட்டுள்ள ஆயுட்கால சந்தா பணத் தொகையில் வருடத்திற்கென அமைப்பினால் தீர்மாணிக்கப்படும் தொகை வருமானமாகக் கருதப்படும் மிகுதி எஞ்சிய தொகையானது நிதிநிலைமைக் கூற்றில் பொறுப்பாகக் காட்டப்படும்.

1. ஆயுட்கால சந்தாப் பணத்தை பெற்றுக் கொள்ளும் போது
   கொள்ளல் கொடுத்தல் கணக்கு வரவு
   ஆயுட்கால சந்தாக் கணக்கு செலவு

2. ஆயுட்கால சந்தாவிலிருந்து நிகழாண்டிற்குரிய சந்தாப் பணத்தை கழித்தெடுத்துக் கொள்ளும் போது
   ஆயுட்கால சந்தாக் கணக்கு வரவு
   வருமான செலவு கணக்கு செலவு

### நன்கொடை

குறிப்பிட்ட அமைப்பானது பிரதி உபகாரம் எதனையும் எதிர்பாராமல் சமூக நோக்கின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்படும் செலுத்திக் கொள்ளப்படும் பெறுமதி தொகை நன்கொடையாகும்.

இவ் அடிப்படையில் அமைப்பினால் பெற்றுக் கொள்ளப்படும் நன்கொடையானது பின்வரும் இரு வகைகளாக வகைப்படுத்தப்படுகன்றது.

நன்கொடை
- பொது நன்கொடை
- விசேட நன்கொடை



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பொது நன்கொடை

குறிப்பிட்ட அமைப்பின் அன்றாட நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக பெற்றுக் கொள்ளப்படும் தொகை பொது நன்கொடையாகும்.

நாட்குறிப்புப் பதிவு பின்வருமாறு அமையும்

கொள்ளல் கொடுத்தல் கணக்கு வரவு

நன்கொடை / வருமானச் செலவு கணக்கு செலவு

முழுத் தொகையும் பெற்றுக் கொண்ட வருடத்தில் வருமானமாக காட்டப்படும்

## விசேட நன்கொடை

குறிப்பிட்ட அமைபடபொன்றில் குறிப்பிட்ட நிலையான நடவடிக்கையொன்றுக்காக பெற்றுக் கொள்ளப்படும் பெறுமதி விசேட நன்கொடையாகும்.

*உதாரணம்*

ரூபா50 இலட்சம் பெறுமானம் கொண்ட மோட்டார் வாகனம் நன்கொடையாக பெற்றுக் கொள்ளல்.

**நாட்குறிப்புப் பதிவுகள்**

01. மோட்டார் வாகனம் நன்கொடையாக பெறுதல்

மோட்டார் வாகனக் கணக்கு வரவு

நன்கொடைக் கணக்கு செலவு

02. நன்கொடையின் குறிப்பிட்ட ஓர்பகுதி வருமானமாக காட்டப்படும் போது

நன்கொடைக் கணக்கு வரவு

வருமானச் செலவுக் கணக்கு செலவு

நன்கொடைப் பெறுமதியில் வருமானச் செலவுக் கணக்கு மாற்றப்பட்ட தொகை தவிர எஞ்சிய மீதித் தொகை நிதி நிலைமைக் கூற்றில் திரள்நிதியின் கீழ் காட்டுதல் வேண்டும்.

தொகுப்பு : திரு.சி.தவராஜா, ஆசிரியர்- கணக்கீடு (யாழ்/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார், ஆசிரியர்- த.தொ.தொ (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்.)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# கொள்ளல் கொடுத்தல் கணக்குக்கும் வருமானச் செலவு கணக்குக்கும் இடையிலான வேறுபாடுகள்

| கொள்ளல் கொடுத்தல் கணக்கு | வருமானச் செலவுக் கணக்கு |
|---|---|
| காசு மீதியினைக் கண்டறிந்து கொள்வது நோக்கமாக அமையும் | அமைப்பில் மேலதிகம் அல்லது பற்றாக்குறையை அறிந்து கொள்வது நோக்கமாக அமையும் |
| காசு அடிப்படையில் பதிவுகள் மேற்கொள்ளப்படும் | அட்டுறு முறையில் பதிவுகள் மேற்கொள்ளப்படும் |
| காசு அல்லாத விடயங்கள் பதியப்பட மாட்டாது.<br>உ.தா : பெறுமானத் தேய்வு | காசு அல்லாத விடயங்களும் பதியப்படும் |
| மூலதனச் செலவினங்களை உள்ளடக்கும் | மூலதனச் செலவினங்கள் உள்ளடக்கப்பட மாட்டாது |
| ஆரம்ப மீதியுடன் ஆரம்பமாகும் | ஆரம்ப மீதியுடன் ஆரம்பிக்காது. |

தொகுப்பு : திரு.சி.தவராஜா, ஆசிரியர்- கணக்கீடு (யாழ்/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார், ஆசிரியர்- த.தொ.தொ (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்.)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பயிற்சி 01

1. இலாப நோக்கமற்ற அமைப்பானது தமது நிதியாண்டுக்கான பெறுபேற்றை அறிவதற்காக தயாரிக்கப்படும் ஓர் கணக்கு
   1. வருட சந்தாக் கணக்கு
   2. வருமானக் செலவுக் கணக்கு
   3. நிதி நிலைமைக் கூற்று
   4. கொள்ளல் கொடுத்தல் கணக்கு
   5. நன்கொடைக் கணக்கு (…………….)

2. இலாப நோக்கமற்ற அமைப்புக்களின் பிரதான வருமான ஊடகம்
   1. திரள்நிதி
   2. கலை விழா வருமானம்
   3. இசை விழா வருமானம்
   4. நுழைவுச் சீட்டு விற்பனை வருமானம்
   5. சந்தா வருமானம் (…………….)

3. குறிப்பிட்ட நிதிவருட சந்தா குறிப்பிட்ட நிதிவருட முடிவிலும் பெறப்பட வேண்டியிருப்பின் அது
   1. சந்தா முற்பணம்
   2. ஆயுட்கால சந்தா
   3. சந்தா
   4. சந்தா வருமதி
   5. ஏற்கனவே பெறப்பட்ட சந்தா (…………….)

4. குறிப்பிட்ட நிதி வருடத்தில் பெறப்பட்ட சந்தா 100000 ரூபா

| | |
|---|---|
| குறிப்பிட்ட நிதி வருடத்தில் பெறப்பட்ட சந்தா | 100000 ரூபா |
| ஆரம்ப சந்தா வருமதி | 5000 ரூபா |
| ஆரம்ப சந்தா முற்பணம் | 2000 ரூபா |
| இறுதி சந்தா வருமதி | 15000 ரூபா |
| இறுதி சந்தா முற்பணம் | 4000 ரூபா |

   இத் தகவலடிப்படையில் வருடாந்த சந்தாவாக அமைவது.
   1. 108000 ரூபா
   2. 106000 ரூபா
   3. 110000 ரூபா
   4. 100000 ரூபா
   5. 96000 ரூபா (…………….)

5. காசு முறையில் தயார் செய்யப்படும் ஓர் கணக்கு
   1. வருமானச் செலவுக் கணக்கு
   2. சந்தாக் கணக்கு
   3. நன்கொடைக் கணக்கு
   4. கொள்ளல் கொடுத்தல் கணக்கு
   5. திரள்நிதி கணக்கு (…………….)

தொகுப்பு : திரு.சி.தவராஜா, ஆசிரியர்- கணக்கீடு (யாழ்/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார், ஆசிரியர்- த.தொ.தொ (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்.)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பயிற்சி 02

1. 31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கு
சந்தாப் பெறுவனவு 160000 ரூபா

- நிதியாண்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் காணப்பட்ட சந்தா நிலுவை, சந்தா முற்பணம் பின்வருமாறு

| | 31.03.2016 | 31.03.2017 |
|---|---|---|
| சந்தா நிலுவை | 6000 ரூபா | 3000 ரூபா |
| சந்தா முற்பணம் | 8000 ரூபா | 4000 ரூபா |

வருட சந்தாத் தொகையை மதிப்பிடுக.

2. 31.03.2017, 31.02.2016 இல் சந்தா நிலுவை, சந்தா முற்பண விபரங்கள் பின்வருமாறு

| | 31.03.2017 | 31.03.2016 |
|---|---|---|
| சந்தா வருமதி | 7000 ரூபா | 8400 ரூபா |
| சந்தா முற்பணம் | 1600 ரூபா | 2100 ரூபா |

ஏனின் அமைப்பின் வருடத்திற்குரிய சந்தா 210000 ரூபா எனின் காசாகப் பெற்ற சந்தாவைக் கணிப்பிடுக.

3. 31.03.2017 இல் கொள்ளல் கொடுத்தல் கணக்கு
சந்தாப் பெறுவனவு 480000 ரூபா

மேலதிக தகவல்.

1. 01.04.2016 இல் 40 அங்கத்தவர்கள் 05 மாத சந்தாவை செலுத்தத் தவறியிருந்தனர்.
2. 01.04.2016 இல் 30 அங்கத்தவர்கள் 10 மாத சந்தாவை முற்பணமாக செலுத்தியிருந்தனர்.
3. 31.03.2017 இல் 15 அங்கத்தவர்கள் 20 மாத சந்தாவை செலுத்தத் தவறியிருந்தனர்.
4. 31.03.2017 இல் 25 அங்கத்தவர்கள் 15 மாத சந்தாவை முற்பணமாக செலுத்தியிருந்தனர்.

குறிப்பிட்ட அங்கத்தவர் ஒருவரது மாத சந்தாப்பணம் 500 ரூபா ஆகும். வருட சந்தாத் தொகையை மதிப்பிடுக.

4. 31.12.2017 ஆம் ஆண்டுக்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கு பெறுவனவுப் பக்கம்.
அங்கத்தவர் ஒப்பப் பணம்

2016 ………….. 26000 ரூபா
2017 ………….. 150000 ரூபா
2018 ………….. 15000 ரூபா

மேலதிக தகவல்

ஆரம்ப இறுதி சந்தா நிலுவை சந்தா முற்பண விபரம் வருமாறு

| | | 01.01.2017 | 31.12.2017 |
|---|---|---|---|
| சந்தா நிலுவை | 2016 | 30000 | 4000 |
| | 2017 | - | 20000 |
| சந்தா முற்பணம் | | 5000 | 15000 |



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

5. 31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கு.

| | |
|---|---|
| சந்தாப் பெறுவனவு | 160000 ரூபா |
| ஆயுட்கால சந்தா | 20000 ரூபா |

மேலதிகத் தகவல்கள்

| | 31.03.2016 | 31.03.2017 |
|---|---|---|
| சந்தா நிலுவை | 5000 ரூபா | 4000 ரூபா |
| சந்தா முற்பணம் | 2000 ரூபா | 3500 ரூபா |
| ஆயட்கால சந்தா | 16000 ரூபா | 30000 ரூபா |

வருட சந்தாத் தொகையை மதிப்பிடுக.

6. பின்வரும் தகவல்களை கருத்தில் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

31.12.2017 இல் பெற்ற சந்தா விபரம் வருமாறு

2016 = ரூபா 30000
2017 = ரூபா 175000
2018 = ரூபா 20000

31.12.2017 இல் பெறவேண்டியவை தொடர்பானவை

2016 = 20000 ரூபா
2017 = 25000 ரூபா

- 01.01.2017 இற்கான வருமதி சந்தாவாக காட்டப்படும் தொகை யாது?
- 31.12.2017 இற்கான சந்தாவாக கணிப்பிடப்படும் தொகை யாது?

7. கழகத்தில் ஆயுட்கால சந்தாவிற்குரிய அங்கத்தவர் எண்ணிக்கை 10 பேர்.
ஒரு அங்கத்தவருக்கான ஆயுட்கால சந்தாத் தொகை 5000 ரூபா
ஆயுட்கால சந்தா பதிலழிப்புச் செய்யப்படும் கால எல்லை 10 வருடம்
ஆயுட்கால சந்தா முழுவதும் பெறப்பட்ட காலம் 01.04.2011 ஆகும்.
31.03.2017 இல் முடிவடைந்த காலத்திற்குரிய சந்தாவாக கழிக்கப்படும் தொகை யாது?

8. குறிப்பிட்ட விளையாட்டுக் கழகம் கட்டிட நன்கொடையாக 1000000 ரூபாவினைப் பெற்றுள்ளது. இதில் 40% மான அளவு தொகையை நிகழாண்டில் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தியது. மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பான நாட்குறிப்புப் பதிவுகளைக் குறிப்பிடுக.

9. விளையாட்டுக் கழகமானது 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சந்தா தொடர்பான தகவல பின்வருமாறு

| ஆண்டு | சேர்ந்து கொண்ட அங்கத்தவர்கள் | பெற்றுக்கொண்ட சந்தா |
|---|---|---|
| 2015 | 30 | 20000 ரூபா |
| 2016 | 20 | 30000 ரூபா |
| 2017 | 50 | 70000 ரூபா |

கழகத்தில் ஆண்டுச் சந்தா 1000 ரூபாவாகும்
முற்பண சந்தா முறை காணப்படவில்லை.
2017 ஆம் ஆண்டின் வருமானமாகக் காட்டப்படவேண்டிய சந்தா, வருமதி சந்தா தொகையை தனித்தனியே குறிப்பிடுக.

தொகுப்பு : திரு.சி.தவராஜா, ஆசிரியர்- கணக்கீடு (யாழ்/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார், ஆசிரியர்- த.தொ.தொ (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்.)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

10. 01.01.2017 இற்கான சந்தா தொடர்பான தகவல்கள்

| | | | |
|---|---|---|---|
| | சந்தா நிலுவை | = | 30000 ரூபா |
| | முற்பண சந்தா | = | 20000 ரூபா |
| | 31.12.2017 இல் கிடைக்கப் பெற்ற சந்தா | | 210000 ரூபா |
| இதில் | 2016 இற்குரிய சந்தாப் பணம் | = | 30000 ரூபா |
| | 2018 இற்குரிய சந்தாப்பணம் | = | 10000 ரூபா |

2017ஆம் ஆண்டுக்குரிய சந்தாவாகிய 8000 ரூபா 31.12.2017 வரை நிலுவையாகவே காணப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டுக்குரிய வருமானச் செலவுக் கணக்கில் காட்டவேண்டிய சந்தாப் பெறுமதி எவ்வளவு?

தொகுப்பு : திரு.சி.தவராஜா, ஆசிரியர்- கணக்கீடு (யாழ்/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார், ஆசிரியர்- த.தொ.தொ (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்.)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பயிற்சி 03

01. 31.03.2017 இல் முடிவடைந்த வரடத்திற்காக றோயல் விளையாட்டுக் கழகத்தின் கொள்ளல கொடுத்தல் கணக்கு.

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01.04.2016இல் மீதி | 60000 | தளபாடம் | 10000 |
| சந்தா பெறுவனவு | 100000 | மைதான வாடகை | 6000 |
| ஆயுட்கால சந்தா | 40000 | வீரவீராங்கனை உபசரிப்பு | 5000 |
| கலைவிழா வருமானம் | 4000 | மைதான திருத்தம் | 4000 |
| பழைய பத்திரிகை விற்பனை | 6000 | விளையாட்டுப் பொருள் | 20000 |
| | | மின்சாரம் | 4000 |
| | | பத்திரிகைச் செலவு | 9000 |
| | | விளையாட்டுப் போட்டி செலவு | 3000 |
| | | மீ.செ | 149000 |
| | 210000 | | 210000 |
| மீ.வ | 149000 | | |

பின்வருவன மேலதிகத் தரவுகளாகும்.

அ) நிதியாண்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் காணப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்களின் விபரங்கள் பின்வருமாறு

| 31.03.2016 | | 31.03.2017 |
|---|---|---|
| 6000 | சந்தா வருமதி | 4000 |
| 3000 | சந்தா முற்பணம் | 2000 |
| 30000 | ஆயுட்கால சந்தா | 50000 |
| 2000 | முற்பண மைதான வாடகை | 1000 |
| 1600 | அட்டுறு மின்சாரம் | 1400 |
| 500 | கலைவிழா வருமான வருமதி | 800 |
| 30000 | தளபாடம் | 28000 |
| 40000 | விளையாட்டுப் பொருள் | 46000 |
| 60000 | காசு மீதி | 149000 |
| 50000 | உடற்பயிற்சி பெறி | 40000 |

வேண்டப்படுவது

1. 01.04.2016 இல் உள்ளவாறான திரள்நிதி கணிப்புக்கூற்று
2. 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானச் செலவுக் கணக்கு
3. 31.03.2017 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று
4. சந்தாக் கணக்கு
5. ஆயுட்கால சந்தாக்கணக்கு



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk